1973 டிசம்பர் 1]

அளிக்கப்பட்டுள்ளப் பதவிகளில் ஊராட்சி ஒன்றியங்களுக்கு எத்தனை, தனியார் துறை பள்ளிகளுக்கு எத்தனை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ஏற்கெனவே தொழில் பழகு ஆசிரியர் என்ற முறையில் 5,746 பதவிகளை ஏற்படுத்தினோம். அவர்களில் 1,800 பேர்களைத் தவிர மற்றவர்கள் எல்லாம் முறையான பதவிகளில் ஏற்கெனவே அமர்த்தப்பட்டுவிட்டார்கள். நியமிக்கப்பட்ட ஆசிரியர்களில் யாரும் விடுபடாமல் எல்லோரும் முறையானப் பதவிகளில் அமர்த்தப்படுவார்கள். இப்போது ஏற்படுத்தப்பட்டுள்ள 10,200 பதவிகளில் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கு எத்தனை, அரசு சார்பு பள்ளிகளில் எத்தனை, தனியார் பள்ளிகளுக்கு எத்தனை என்பதை அந்தந்த மாவட்ட தலைமைப்பள்ளி அதிகாரி அவர்கள் இருக்கின்ற நிலைமைகளை அனுசரித்து நியமனம் செய்து வருகிறார்கள்.

Pension for Tamil scholars

* 540 Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to provide pension to aged scholars in Vedic Sciences and Tamil Philosophy; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Thiru N. DENNIS: Sir, as their contribution is to the society may I know whether, to encourage them, special treatment will be shown to them by providing pension?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே வடமொழி வல்லுநர்களுக்கு மத்திய அரசு உதவித்தொகை அளித்து வருகிறது. மாநில அரசில் அப்படிப்பட்ட திட்டம் இல்லை. ஆனால் மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து கலைஞர்களுக்கு உதவி அளிக்கும் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. வட மொழி வல்லுநர்கள் உதவித் தொகைப் பெறுவதற்கு, அவர்கள்

55 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருக்க வேண்டும்; 150 ரூபாய்க்கு மேற்படாத திங்கள் வருமானம் உடையவர்களாக இருக்க வேண்டும். அப்படிப்பட்டவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 1,800 ரூபாய் தரப்படுகிறது. அதிலே அவர்கள் வேறு வகைகளில் பெறுகின்ற வருமானத்தைக் கழித்துக்கொள்வார்கள். அந்த வகையில் கிட்டத்தட்ட 200 வடமொழி வல்லுநர்கள் மத்திய அரசின் உதவித்தொகை பெற்று வருகிறார்கள். மத்திய அரசும், மாநில அரசும் சேர்ந்து செயல்படுத்தும் திட்டத்தின் கீழ் 300 கலைஞர்கள் உதவி பெற்று வருகிறார்கள். மாநில அரசு தனிப்பட்ட முறையில் 195 கலைஞர்களுக்கு உதவி அளித்து வருகிறது.

THIRU K. M. SUBRAMANIAM: Was there any lapse of funds allotted by the Centre in the matter of encouragement of Sanskrit education in the State of Tamil Nadu, last year? Was anything left unutilised?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அந்தப் பணம் நம்மிடத்தில் நேரிடையாகக் கொடுக்கப்படுவதில்லை. மத்திய சர்க்காரே கொடுக்கிறது. நம்மிடத்தில் கொடுக்கப்பட்டு, செலவழிக்கப்படாமல் எந்தத் தொகையும் அனுப்பப்படவில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH: May I know from the Hon. Minister for Education whether they have collected details of such scholars in our State and whether they are going to submit them to Central Government for their consideration?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாநில அரசுக்கு விண்ணப்பித்துக் கொண்டார்கள் என்றால் நாம் அதை மத்திய அரசுக்கு சிபார்சு செய்து அனுப்பி வைக்கலாம்.

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, இந்த மூலக் கேள்வியில் தமிழ் மெய்ப்பொருளியலிலும் சிறந்து விளங்குகிற வயதான அறிஞர்களுக்கு ஓய்வூதியம் கொடுப்பதுபற்றி கேட்கப் பட்டிருக்கிறது. எனவே சமரச சன்மார்க்க நெறியில் நின்று அஞ்ஞான இருளை அகற்ற மெய்ஞ்ஞான தொண்டாற்றி வரும் திருமுருக கிருபானந்தவாரியார் எனது தொகுதியைச் சார்ந்தவர் —தள்ளாத வயதில் அருந்தொண்டாற்றிவரும் அவருக்கு ஓய்வூதியம் அளிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.